**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.4238/ஆ5/2023, நாள்.10.10.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2023ல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு உறுதிமொழி – 11.10.2023 அன்று அனைத்து வகை உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலலைப் பள்ளிகளில் இறைவணக்க (பிரேயர்) நேரத்தில் வெண்புள்ளிகள் குறித்த உறுதிமொழி எடுத்தல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45455/எம்/இ2/2023, நாள். 04.10.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் – இந்தியா அமைப்பின் சார்பாக 1996ஆம் ஆண்டு முதல் வெண்புள்ளிகள் நோயல்ல, பிறருக்கு தொற்றாது, பரம்பரையாக வராது என்ற அறிவியல் உண்மையை, கருத்தரங்குகள், மனிதசங்கிலிகள், பேரணிகள், மாராத்தான்கள் என பல்வேறு வடிவங்களில் வெண்புள்ளிகள் உள்ளவர்களிடமும் பொதுமக்களிடமும் பரப்பி வருவதாகவும் அதன் தொடர்ச்சியாக 2023ல் வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற உலகின் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட திட்டமிட்டு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்து, எதிர்வரும் 11.10.2023 (புதன்கிழமை) அன்று வெண்புள்ளிகள் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் எதிர்வரும் 11.10.2023 (புதன்கிழமை) அன்று காலை வழிபாட்டுக் கூட்டத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெண்புள்ளிகள் விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்க அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – உறுதிமொழி

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர்,
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.